Journal of Valartamil, eISSN 2821-3157,
Volume 2, No.2, 2021, (104-118).

# அருணகிரிநாதர்: ஒரு சிவயோகச் சித்தர்

*Arunagirinathar: A Sivayoga Siddhar*

**S.Manimaran[1]**
Senior Lecturer in the Department of Indian studies,
University of Malaya, Kuala Lumpur, Malaysia
manimaran23@um.edu.my

**G.Sivapalan[2]**
Senior Lecturer in the Department of Indian studies,
University of Malaya, Kuala Lumpur, Malaysia.
gsiva_palan@um.edu.my

**R. Kurinjivendan[3]**
Professor in the Tamil literature,
Culture & Diaspora, Head, Department of Tamil Studies in Foreign Countries,
Faculty of Developing Tamil, Tamil University, Thanjavur, Tamil Nadu, India.
kurinjivenden@gmail.com

**Published:** 23 December 2021

**To cite this article (APA):** Subramaniam, M., Sivapalan, G., & Kurinjivendan, R. (2021). *அருணகிரிநாதர்: ஒரு சிவயோகச் சித்தர்.* *Journal of Valartamil*, *2*(2), 104-118. https://doi.org/10.37134/jvt.vol2.2.9.2021

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol2.2.9.2021

**ஆய்வுச்சாரம்**: அருணகிரியார் முருகப்பெருமானைப் போற்றிப் பாடியுள்ள பாடல்களில் காணப்படும் சித்தர் நெறி குறித்த செய்திகளை ஆராய்ந்து முன்வைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இந்த ஆய்வுக்குரிய தரவுகளான சித்தர் பாடல்களும் அருணகிரிநாதர் முருகன்மேல் பாடிய பாடல்களும் நூலக ஆய்வின் வழி பெறப்பட்டன. சித்தர் பாடல்கள் பெரிதும் வலியுறுத்தும் மூவாசை நீக்கம், வினையறுத்தல், இறைவனின் திருவடி, குருவின் துணை, சிவயோகநெறி ஆகிய கூறுகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அருணகிரியாரின் பாடல்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இந்த ஆய்வு பண்புசார் (qualitative) அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆய்வு நெறியை அடிப்படையாகக் கொண்டு விளக்கப்படுத்தல் (descriptive) முறையில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் வாயிலாக சில கருத்து முடிபுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அருணகிரிநாதர், பன்னெடுங்காலமாக முருகபக்தராகவே மக்களுக்கு அடையாளம் காட்டப்பட்டிருக்கிறார். அவரது பாடல்களும் பக்திப்பாடல்கள் என்ற நிலையிலேயே அறியப்பட்டு வந்துள்ளன. முருகப்பெருமான் மீது அருணகிரியார் பாடியுள்ள பாடல்கள், சித்தர் பாடல்கள் போலவே மறைபொருளால் நிரம்பியவை. இவரது பாடல்களின் கருத்துகள் சித்தர் பாடல்களின் கருத்துகளோடு முழுவதும் இயைந்து

செல்கின்றன. உயிர்களின்மீது பெருங்கருணை கொண்ட சித்தர்களைப் போல, உலகியல் துன்பங்களில் மக்கள் உழன்று விடலாகாது என்னும் பேரிரக்கம் கொண்டவர் அருணகிரியார். இறைவனைக் குருவாக ஏற்று, தன்னிலை அறிந்த சித்தர்களைப் போலவே, முருகனைக் குருவாகக் கொண்டு அருணகிரியார் தன்னையறிந்தார். எனவே அருணகிரிநாதர் ஒரு சிவயோக சித்தர் என்பது இக்கட்டுரையின் கருத்து முடிபாகும்.

**கருச்சொற்கள்**: அருணகிரிநாதர், சித்தர் பாடல்கள், சித்தர் நெறி, முருகப்பெருமான், மெய்ஞ்ஞானம்.

**Abstract:** This article aims to analyze the Siddhar philosophies highlighted in Arunagirinathar's Murugan devotional songs. The Siddhar songs and Arunagirinathar's Murugan devotion songs used in this study were obtained through library research. Arunagiri's songs are analyzed on the platform of the riddance of three desires, overcoming karma, devotion to God, Guru's guidance, and the philosophy of Sivayoga which are the main themes found in Siddhar songs. Hence, this is a qualitative research and the article is written in a descriptive manner. For a long time, Arunagiri has been regarded as a Murugan devotee and his songs regarded as devotional songs. However, Arunagiri's Murugan devotional songs are laced with hidden meanings just like Siddhar songs and their themes are synonymous to Siddhar songs. Arunagiri was as compassionate towards the population as the Siddhars and wanted to guide them away from worldly miseries. Arunagiri attained enlightment by accepting the Lord Murugan as his Guru, just as Siddhars did by accepting God as their Guru. Therefore, it can be concluded that Arunagirinathar is a Sivayoga Siddhar.

**Keywords**: Arunagirinathar, lord murugan, Siddhar poems, siddhar principles, wisdom

## முன்னுரை

முருகப்பெருமான் குறித்த பக்திப்பாடல்கள் தமிழுக்கும் தமிழ்ச்சமூகத்துக்கும் கிடைத்துள்ள அருஞ்சொத்து; அருள் சொத்து. முருகப்பெருமானைப் போற்றிப்பாடியுள்ள ஆன்மீகப் பெரியோர் பலர். அவர்களுள் அருணகிரிநாதர் குறிப்பிடத்தக்கவர். இவர்தம் பாடல்கள் ஆழ்வார்கள் நாயன்மார்களுக்குப் பின்னர், தமிழ் பக்தி இலக்கிய வரிசையில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்பவை; பக்திச்சிறப்பும் சந்த நலமும் பொதிந்தவை. இது நாள் வரை பெரும்பான்மை மக்களால் பூசனைக்கும் பாராயணத்துக்கும் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்த திருப்புகழிலும், கந்தர் அநுபூதி முதலாய நூல்களிலும் பல ஆன்மீகப் படிநிலைகள் மறைந்து கிடக்கின்றன. அருணகிரிநாதரை முருகப்பக்தராக மட்டுமே காணும் போக்கு மக்களிடையே இன்றும் காணப்படுகின்றது. ஆனால், அவர் முருகப்பெருமானை ஆன்மகுருவாகக் கொண்டு சிவஞானயோகம் கற்ற மாபெரும் சித்தர் என்பது பலராலும் அறியப்படாத ஒன்றாகவே உள்ளது.

## ஆய்வு நோக்கம்

அருணகிரியார் முருகப்பெருமானைப் போற்றிப் பாடியுள்ள பாடல்களில் காணப்படும் சித்தர் நெறி குறித்த செய்திகளை ஆராய்ந்து, அருணகிரியாரும் ஒரு சித்தரே எனும் கருத்தை முன்னிறுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு அணுகுமுறை

இந்த ஆய்வுக்குரிய தரவுகளான சித்தர் பாடல்களும் அருணகிரிநாதர் முருகன்மேல் பாடிய பாடல்களும் நூலக ஆய்வின் வழி பெறப்பட்டன. சித்தர் பாடல்கள் பெரிதும் வலியுறுத்தும் மூவாசை நீக்கம், வினையறுத்தல், இறைவனின் திருவடி, குருவின் துணை, சிவயோகநெறி ஆகிய கூறுகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அருணகிரியாரின் பாடல்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இந்த ஆய்வு பண்புசார் *(qualitative)* அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆய்வு நெறியை அடிப்படையாகக் கொண்டு விளக்கப்படுத்தல் *(descriptive)* முறையில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

## முன்னோடி ஆய்வுகள்

இந்த ஆய்வுக்கென நூலோட்டம் மேற்கொண்டபோது அருணகிநாதர் வரலாறு, முருகன் மீது அவர் பாடிய பாடல்களின் மூலங்கள், அவற்றுக்கான விளக்கவுரை ஆகிய நூல்கள் தாராளமாகக் கிடைத்தன. இவற்றுள் கிருபானந்தவாரியாரின் (1954) கந்தரனுபூதி: உரையுடன் எனும் நூலும் தா.கோவேந்தன் (2000) திருப்புகழ் மெய்ப்பொருள் உரை ஆகியவை தற்போதைய இந்த ஆய்வுக்கு அடிப்படை நூல்களாக அமைந்தன. இதுபோன்றே, சித்தர் பாடல்களைப் பற்றிய ஆய்வுக்கு வா.சரவணமுத்துப்பிள்ளையின் (1927) பதிப்பாகிய பதினெண் சித்தர்கள் அருளிய பெரியஞானக்கோவை நூல் அடிப்படையாக அமைந்தது. சித்தர் பாடல்களுக்கும் அருணகிரிநாதர் பாடல்களுக்கும் விளக்கவுரை நூல்கள் பல அமைந்தன. அவற்றுள் இரா.மாணிக்கவாசகத்தின் (1982) நம் நாட்டுச் சித்தர்கள் எனும் தலைப்பிலான நூலும் பா.கமலக்கண்ணனின் (1957) திருப்புகழ் காட்டும் முத்தி நெறி எனும் படைப்பும் இவ்வாய்வுக்குப் பெரிதும் துணை செய்தன. ஆனால்,

**அருணகிரிநாதர்: ஒரு சிவயோகச் சித்தர்**

அருணகிரியாரை ஒரு சித்தராக முன்னிருத்தும் நூல்களோ ஆய்வுகளோ இதுவரை வெளிவந்திருப்பதாகத் தெரியவில்லை. அருணகிரிநாதரைச் சிவயோகியாகவும் சிவயோகச் சித்தராகவும் அறிந்துகொள்வதற்கு ஓரிரண்டு கட்டுரைகளில் காணப்பட்ட சிறுகுறிப்புகளைத் தவிர வேறெந்தத் தரவுகளும் கிட்டவில்லை. இவற்றை நோக்க, ஆய்வாளரின் தற்போதைய தலைப்பை ஒட்டி யாதொரு ஆய்வும், எழுத்துப்படைப்பும் இல்லாத வெற்றிடம் இருப்பது தெளிவாகின்றது. தற்போதைய இந்த ஆய்வு அந்த வெற்றிடத்தை நிரப்ப உதவும்.

## அருணகிரியார் பாடல்களின் பின்புலம்

சித்தர்களின் பாடல்கள் மறைபொருளால் ஆனவை. அவை மேம்போக்காக அணுகும் நிலையில் ஒரு பொருளும், ஆழ்நிலையில் அணுகும் சூழலில் பிறிதொரு பொருளையும் தரும் தன்மை கொண்டவை. எனவேதான் பாமரர் முதல் பண்டிதர் வரை அனைவரையும் ஒருங்கே ஈர்க்கும் தன்மையுடன் அப்பாடல்கள் விளங்குகின்றன. அருணகிரியார் பாடல்களும் இச்சிறப்புகளால் நிரம்பியவை. அவரது பாடல்களில் அமைந்துள்ள நுண்பொருள்கள், தெளிந்த ஞானிகளுக்கன்றி ஏனையோருக்குப் புலப்படாதவை. ஆனாலும் கருதிய பொருளைக் கேட்போர் உள்ளத்தில் நன்றாகப் பதிய வைக்கும் சொற்கலையை அருணகிரியார் பாடல்கள் உட்கொண்டுள்ளன. எனவேதான் பாமரர்க்குத் தெரிந்திருக்கும் சொற்களைக் கொண்டே அவர்களின் உள்ளங்களில் மெய்ஞ்ஞான விதைகளை ஆழ ஊன்றியுள்ளார். தனக்கு வாய்த்த குரு, முருகன் என்பதால் விந்தையான சந்தத்தமிழைக் கொண்டு இத்தகைய அற்புதத்தை இவர் நிகழ்த்தியிருக்கின்றார்.

அருணகிரியாரின் மெய்ஞ்ஞானத்தமிழின் ஆழ்ந்த ஆன்மஅனுபவத்தில் ஈடுபட்டவர்களில் வடலூர் வள்ளலாரும், தாயுமானவரும் முன்வைத்து எண்ணத்தக்கவர்கள். கந்தரலங்காரத்தைப் பாடும்போதெல்லாம், அப்பாடலில் ஊனும், உளமும், உயிரும் தோய தான் கலந்திருப்பதை,

"ஊன் படிக்கும் உளம் படிக்கும்
உயிர் படிக்கும், உயிர்க்குயிரும்
தான் படிக்கும் அனுபவம்காண்," (சிரி,1999,ப.137)

எனக் குறிப்பிடுகின்றார் வள்ளலார். இதே தன்மையிலான அனுபவப்பெருக்கை, தாயுமானவரின் வாழ்க்கையிலும் காணமுடிகிறது. ஆன்மாவின் தன்னனுபவங்களாகிய மெய்ஞ்ஞானச் செய்திகள், அருணகிரிநாதர் பாடல்களின் உயிர்ச்சத்தாக விளங்குகின்றன. அம்மெய்ஞ்ஞானச் செய்திகளை,

அதைப்போன்ற இணைஅனுபவமுள்ள இன்னொரு மெய்ஞ்ஞானியால் மட்டுமே உணர்ந்து கொள்ளவியலும். உயிருக்குயிரான இவ்வனுபவத்தை அருணகிரியாரின் பாடல்களில் பெற்ற தாயுமானவர்,

"ஐயா! அருணகிரி அப்பா! உன்னைப்போல்
மெய்யாக ஓர்சொல் விளம்பினர் யார்?" (சிரி,1999,ப.137)

என உளமுருகுகின்றார்.

## அருணகிரிநாதரின் பாடல்களில் சித்தர் நெறி

அருணகிரிநாதரின் பாடல்கள் ஆன்மீகப்பாதையிலே எத்தகைய தேடலுடையார்க்கும் அவரவர் நோக்கத்திற்கேற்ப தெளிவு தரும் பெற்றியுடையயவை. இப்பாடல்கள் அனைத்தும் குருநிலையில் நின்று பக்தனைக் கரைசேர்க்கும் தன்மை கொண்டு விளங்குகின்றன. சித்தர்நெறி என்பது உலகியலில் உழலும் மானிடனுக்கு மூவாசைகளை நீக்கி, வினையறுத்து, இறைவனின் திருவடியைச் சிந்தித்து, குருவின் துணையுடன் சிவயோகம் சாரும் வழிதனைக் காட்டுவதாகும். அருணகிரியார் பாடல்களில் இச்சித்தர்நெறி வெளிப்பட்டிருக்கும் பாங்கினை இனிக்காண்போம்.

## மூவாசை நீக்கம்

மனிதன் உடம்பினைப் பெற்றதன் பயனெல்லாம் இறைவனைத் தேடுதலும் அவ்விறைவனை உடலில் காண்பதுவுமே எனும் கொள்கையை உடையவர்கள் சித்தர்கள். இறைவன் உறையும் இவ்வுடல் மரணத்தால் அழிவதற்கு முன், அவ்வுத்தமனை அகத்திலே தேட வேண்டும். அவ்வாறு தேடிக் காண முடியாமைக்குப் பல தடைகள் உள்ளதாகச் சித்தர்கள் குறிப்பிடுகின்றனர். அத்தடைகளைக் கண்டறிந்து அவற்றை ஒவ்வொன்றாய்க் களைந்தெடுத்து மனத்தைச் செந்நெறிக்குத் திருப்புவதே சித்தர் நெறியாகும். இதில் ஒவ்வொருவரும் நீக்க வேண்டியவற்றுள் தலையாயது மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை ஆகிய மூவாசையாகும். அம்மூவாசைகளுள் முதன்மையானது பெண்ணாசை.

இவ்வுலகில் உயிர்களின் தோற்றமும் அழிவும் பெண்ணாலேயே உண்டாகின்றன எனவும், உலகிலுள்ள மாயம், இந்திரியம் மற்றும் வாசனை

முதலிய அனைத்தும் பெண்ணாலேயே நிகழ்கிறதெனச் சித்தர்கள் உறுதிபட உரைத்தனர். இதனை,

"காணப்பா பிறப்பிறப்பு பெண்ணாலாச்சு
கைகடந்த மாயமெல்லாம் பெண்ணாலாச்சு
பூணப்பா இந்திரியம் பெண்ணாலாச்சு
புகழ்பெரிய வாசனையும் பெண்ணாலாச்சு" (பெரிய ஞானக்கோவை,பா.50)

எனச் சட்டைமுனி சித்தர் கூற்றின்வழி அறியலாம். உலகில் பெண்ணழகைப் போற்றிப் புகழ்ந்து அடிமையாகி அழிந்தவர் பலர் என்பதாகச் சொல்லும் சித்தர் படைப்புகளில் பெண்சாடல் போக்கில் அமைந்த பாடல்கள் பரவலாகக் காணப்படுகின்றன. சித்தர் பாடல்களிலும் சித்தராகிய அருணகிரிநாதர் பாடல்களிலும் இடம்பெற்றுள்ள பெண்சாடலைப் பற்றித் தெளிவாக விளங்கிக் கொள்ளும் முன்னர், ஒன்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். தனக்குரிமை உடைய மனைவியின் மீது கொள்ளுகின்ற விருப்பம் பற்று எனப்படும். பிறன் மனை மீது கொள்ளுவது ஆசை எனப்படும். அதுபோல தமக்குரிமையில்லாத பொதுமகளிரை விரும்புவதலென்பது ஆசையின் பாற்படும். இதனால் சித்தர்கள் பெண்ணாசை என்று கடிந்து பாடியதெல்லாம் பொருட்பெண்டிரையும் பிறன்மனை விழைதலையுமே என்பது கருதத்தக்கது.

பெண்ணாசை இறைவனை அடையும் நெறியினை அழிக்கும் எனவும், இறைவனது தூயநினைவை மறக்கடித்துவிடும் எனவும் சட்டைமுனி எச்சரிக்கிறார். பெண்ணாசையைத் துறப்பது அரிது எனக்கூறி, அவ்வரிய செயலையும் இறையருளால் சாதிக்க முடியும் என்பதையும் சித்தர் உணர்த்துவர். பெண்ணாசைக்குக் கருவியாக இருக்கும் புலனைக் கட்டுப்படுத்தி, மூலத்தையே எண்ணி வணங்கியும், பெண்ணாசைக்கு அடிப்படையான விந்துவை அடக்கி யோகநெறியில் குண்டலினியை உயர்த்தியும், எண்ணத்தை எப்போதும் உச்சியில் ஊன்றியும் பெண்ணாசை என்னும் அரவத்தை வெட்ட முடியும் எனப் பெண்ணாயை நீக்கும் வழியினைச் சித்தர் பாடல்கள் விளக்குகின்றன (சித்.பெ.ஞா.கோ.21).

பக்தி நலஞ்சான்ற அருணகிரியாரின் பாடல்களில் சிற்றின்பம் சார்ந்த பாடல்கள் விரவி இருப்பதை உற்று நோக்கினால் புலப்படும். பக்தியையும் முக்தியையும் பாட வந்த அருணகிரியார் காமஞ் சான்ற கருத்தை ஆங்காங்கே தெளித்துக் காட்டியதன் காரணம் என்ன? மனித வாழ்க்கையில் சிற்றின்பம் என்பது ஒரு பகுதியே என்பதையும், பேரின்பம் பெற முயல்வதே பிறவியின் கடன்

என்பதையும் உணராமல், சிற்றின்ப வேட்கையோடு வாழ்ந்து, தன்னுடலைக் கொடும்பிணிக்கு ஆளாக்கிக் கொண்டவர் அருணகிரியார். அதனால் மரணத்தின் விளிம்பு வரை சென்று இறையருளால் மீண்டவர். தான் கடந்து வந்த பாதையை அவர் திரும்பிப்பார்க்கிறார். தடம்பிறழ்ந்த வாழ்க்கைக்காகக் குற்றவுணர்வுடன் வருந்துகிறார். தாம் புரிந்த குற்றத்தை மற்றவர்களும் புரிந்து பெருந்துன்பத்தில் உழன்று விடக்கூடாது எனும் பரிவுணர்வோடு காமச்சேற்றிலிருந்து மக்களை ஆற்றுப்படுத்தும் முகத்தான் இறையருளை வேண்டிப் பாடியிருக்கின்றார். இடைவிடாத இறைச்சிந்தையும் இறையருளும் மட்டுமே காமத்தீயைச் சுட்டெரிக்கும் என்பதை அனுபவத்தால் உணர்ந்தவர் அவர். இறையருளின் துணையால் மட்டுமே பெண்ணாசையை அற்றொழிக்கவியலும் என்னுங் கருத்தைப் பின்வருமாறு முன் வைக்கிறார்:

"பெருத்த வுந்தியின் முழுகிமெய் யுணர்வற
வுழைத்தி டுங்கண கலவியைமகிழ்வது தவிர்வேனோ?" (திருப்புகழ்,12)

"மணிசேர்கடி தடமுங் காட்டி
மிகவேதொழி லதிகங் காட்டும்
மடமாதர்கள் மயிலின் சேற்றில் உழல்வேனோ?
நவமாமணி வடமும் பூத்த
தனமாதெனு மிபமின் சேர்க்கை
நழுவாவகை பிரியங் காட்டு முருகோனே" (திருப்புகழ்,63)

காமம் முதலிய உலகியல் துன்பங்கள் அனைத்துக்கும் வினைகளே காரணமாகின்றன. இவ்வினைகளைப் போக்கி வாழ்வதற்கும் அருணகிரியார் வழிகாட்டுகின்றார்.

## வினையறுத்தல்

மெய்ப்பொருளாகிய இறைவனைப் பற்றிக் கேட்டு, சிந்தித்து, உணர்வோர்க்கு நல்வினை தீவினையாகிய இருவகை வினைகளும் சேர்வதில்லை, இதையே,

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" (குறள், 5)

என வள்ளுவப்பெருந்தகையும் குறிக்கின்றார். உயிர்கள் தத்தம் வினைப்பயனளவைக் கொண்டு பிறப்பெடுக்கின்றன. இவ்வினை, அனைத்தும் தத்தம் கால எல்லையில் நுகரப்படும் இயல்புடையன. வினைகளை அவ்வக் கால எல்லைக்குள்ளாகவே அறுக்கச் செய்வதுவும் அவ்விறையருளின் தன்மையாலேயே ஆகும். ஆதி அந்தமிலா அனாதியைக் காதலாகி வணங்கினால் நெருப்பிலே இட்டப் பஞ்சு எரிந்து சாம்பலாவதைப் போல வினைகள் அற்றுப்போகும். இப்பேருண்மையை,

"ஆதி அந்தமில்லா தவனாதியைத்
தீதறும்பவந் தீப்படு பஞ்சுபோல்
போதுறும்படி முப்பொறி யொத்துறக்
காதலாகிக் கருத்திற் கருதுவாம்" (சித்.பெ.ஞா.கோ., இடைக்காடர் காப்புச் செய்யுள்)

என்பார் இடைக்காடர் எனுஞ் சித்தர். இறைவனின் திருப்பாதத்தை அன்புடன் நினைந்து பணிந்தால், கொடியவினைகள் எல்லாம் ஓடிப்போகும் (சித்.பெ.ஞா.கோ.50). வினையறுப்பதோடு தத்துவாதி வாசனைகளையும் அறுப்பவன் இறைவனாவான் (சித்.பெ.ஞா.கோ.12). அருளாளனாகிய கடவுளை நெஞ்சில் போற்றிப் பணிந்தால் கொடுமையான வினைகள் எல்லாம் சூரியனது கதிர்கள் பட்ட பனிபோல் விலகி ஓடும் என்றும் சித்தர்கள் குறிக்கின்றனர் (சித்.பெ.ஞா.கோ.8).

இறையருளால் மட்டுமே வினைதீரும் என்னும் இவ்வுண்மையை அருணகிரியாரின் பாடல்களிலும் பரவலாகக் காணமுடிகின்றது. ஞானத்தீ எல்லாக் கருமங்களையும் சாம்பலாய்ச் செய்துவிடும் என்பதனை,

"சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே" (கந்தரநுபூதி.7)

என்றும், சிவத்தின் அருளூற, செங்கழலாகிய ஞானத்தீ எத்தகைய வினைகளையும் சுட்டுப் பொடித்து விழச் செய்யும் என்பதனை,

"தேனுந்து முக்கனிகள் பால் செங்கரும்பு இளநீர்
சீரும் பழித்த சிவம் அருளூறத்
தீதும் பிடித்த வினையேதும் பொடிந்து விழ" (திருப்புகழ்.238)

என்று பாடுகின்றார் அருணகிரியார்.

அருணகிரியாரின் பக்திப் பனுவல்களில் விஞ்சி நிற்கும் கருத்தென்றால், அது மூலப் பொருளாகிய முருகனை வேண்டி நிற்கின்ற அவருடைய சரணாகதி நிலையே எனத் துணிந்து கூறலாம். வினையறுப்பதற்குச் சரணாகதியை அன்றி வேறு கதி இல்லை என்பது இதனால் புலப்படுகின்றது. சரணாகதி என்பது "நான்" என்னும் ஆணவம் அழிந்து நிற்கின்ற நிலையாகும். ஆணவத்தில் மீண்டும் கட்டுண்டு அழிந்து விடாமல் காப்பது இறைவனின் திருப்பாதம். அருணகிரியாரின் பாடல்களில் பெரும்பான்மையானவை "நின் திருப்பாதம் அடைவேனோ" என ஏங்கி இறைவனின் திருவடியைப் பணிகின்ற ஆன்ம விடுதலையைப் பறைசாற்றுகின்றன. இத்தகையப் பெருமைக்குரிய இறைவனின் திருவடி என்பது எது?

## இறைவனின் திருவடி

நெற்றி நடுநிலைக்கு மேலுள்ள கபாலத்துக்குச் சகஸ்ராரம் என்பது பெயர். இதற்கு ஆயிரத்தெண்மலர் என்பது பொருள். மூளையிலுள்ள நரம்புகளின் அமைப்பை வைத்து இதற்கு இப்பெயர் வந்தது எனக் கூறுவது ஞானிகள் மரபாகும். இந்த சகஸ்ராரத்திலுள்ள பிரம்மரந்திரத்தில் சிவலிங்க வடிவில் இறைவன் வீற்றிருக்கின்றான் என்பர் (கிருபானந்தவாரியார், 1954, ப.88). இதை,

"மத்தியமாம் வானதிலே வளர்ந்த லிங்கம்
மகாமேரு உச்சியிலே வளர்ந்த லிங்கம்
சக்தியும் ஆவுடையுமான லிங்கம்
சஞ்சார சமாதியிலே நிறைந்த லிங்கம்
புத்தியால் மனமொன்றாய்ப் புகழ்ந்த லிங்கம்
பூவரும் தன்னில்தான் முளைத்த லிங்கம்
எத்திசையும் புகழ்ந்திடவே வந்த லிங்கம்
ஏகபரமானதொரு லிங்கம் தானே" (காகபுசுண்டர் ஞானம்.1:51)

எனக் காகபுசுண்டர் தெளிவாகப் பாடியிருக்கின்றார். இதுவே இறைவனின் திருவடியெனச் சித்தர் பாடல்களில் அழைக்கப்படுகின்றது. சித்தர் பாடல்கள் இறைவனது இத்திருவடிச் சிறப்பைப் பலபடப் போற்றியுள்ளன. இறைவனது திருவடிகளைக் கண்டவர்க்குத் தேனாறு பாயும் எனவும்(சித்.பெ.ஞா.கோ.58), கண்ணுக்குப் புலனாகாத இறைவனுடைய திருவடியை உட்புலனால் வணங்கிப் போற்றினால் உன்னதங்களை அடையலாம் எனவும்(சித்.பெ.ஞா.கோ.53), இறைவனது பாதமே குற்றமற்றப் பராபரம் எனவும்(சித்.பெ.ஞா.கோ.87), தாயைக்

காட்டிலும் அன்பு செலுத்தும் அவனது தாளை நேயமுடன் வணங்கியவர்களிடம் அவன் நீங்காமல் தங்கியிருப்பான் எனவும்(சித்.பெ.ஞா.கோ.48), எந்நேரமும் இறைவனது பாதத்தை நினைந்திருப்பவர்க்கு வீடுபேறு கிட்டும் எனவும்(சித்.பெ.ஞா.கோ.44), திருவடிச் சிறப்பைச் சித்தர் பாடல்கள் விளக்குகின்றன.

"நீடுபதம் நமக்கென்றுஞ் சொந்தமென்றே
நித்திய மென்றே பெரியமுத்தி யென்றே
பாடுபடும்போது மாதிபாதம் நினைத்தே
பன்னிப்பன்னிப் பரவ நின்றாடு பாம்பே" (சித்.பெ.ஞா.கோ.2)

எனும் பாம்பாட்டிச்சித்தரின் பாடல், இறைவனது பாதம் நமக்குச் சொந்தமானது; நிரந்தரமானது; பெரிய முத்தியைத் தரவல்லது என விளக்கும். இவ்வாறு இறைவனது பாதமே பரகதிக்கு வழி என இறைவனது திருவடியின் சிறப்பினைச் சித்தர் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

சிவயோகநெறியில் பெருஞ்சித்திப் பெற்றவரான அருணகிரியார், முருகனது திருவடிகளைக் காணவும் அடையவும் தான் கொண்டுள்ள ஏக்கத்தைச் செவ்வேளிடம் விண்ணப்பமாக வைக்கின்ற பாங்கில் "நாயகர் பாதமிரண்டும் அடைவேனோ?" (திருப்புகழ்.1167) எனவும், "மலர்தாட் கமலம் அருள்வாயே!" (திருப்புகழ்.51) எனவும்"குராப்புன தண்டையர் தானருளாய்"(கந்தரலங்காரம்.103) எனவும், "நின் சிற்றடியைக் குறுகிப் பணிந்து பெறக் கற்றிலேன்" (கந்தரலங்காரம்.67) எனவும், "நாளும் களிக்க பதமருள்வாயே"(திருப்புகழ்.238) எனவும், "வடிவே லிறைதான் நினைவாய்"(கந்தரநுபூதி.7) எனவும் திருவடிப்பயனை உளத்திற் கொண்டு சீர்பாதச் சிறப்புகளைப் பாடுகின்றார். சித்தராகிய அருணகிரியாரும் ஏனைய சித்தர்களைப் போன்றே இறைவனது அடியினை வணங்கின் உன்னதமெய்தலாம் எனவும், மோட்ச நிலை தருமெனவும், பெரிய முத்தி தருமெனவும் கூறியுள்ளது தெளிவாக விளங்குகின்றது. இறைவனது திருவடியை அறிந்து போற்றுவதற்கு ஞானம் வேண்டும். அந்த ஞானத்தைப் பயில்வதற்கு மெய்ஞ்ஞானகுருவின் துணை வேண்டும்.

## குருவின் துணை

மெய்ஞ்ஞானகுருவின் துணையோடுதான் ஞானம் பயில வேண்டும் என்பர். மெய்ஞ்ஞான விளக்கங்களைத் தகுந்த குருவிடம் கேட்டு, சிந்தித்து, தெளிந்து

செயல் பட வேண்டும் என ஆன்றோர்கள் கூறியுள்ளனர். சித்தர்கள் குருவழியாகவே ஞானங்கற்றவர்கள். இப்படி பரம்பரை பரம்பரையாக குருமார்க்கமாக ஞானம் பெற்றதன் காரணமாகவே 'சித்தர் குலம்' அல்லது 'சித்தர் பரம்பரை' போன்ற சொற்றொடர்கள் வழக்கிலுள்ளன. எல்லாமாக இருந்து செயலாற்றும் ஆதி வத்துவாகிய பரம்பொருளே குருவாகவும் இருந்து அருள் புரிகின்றது என்பதை,

"அருவாயும் உருவாயும் அந்தியாயும்
அந்தமாயும் ஒளியாயும் ஆகமமாயும்
திருவாயுங் குருவாயுஞ் சீவனாயும்
செறிந்த வத்துவைப் போற்றி பாடுபாம்பே" (சித்.பெ.ஞா.கோ.7)

எனும் பாடலின் வழி தெளிவுபடுத்துகிறார் பாம்பாட்டிச் சித்தர்.

சித்தர் குலத் தலைவனாகிய முருகனால் தடுத்தாட்கொள்ளப் பெற்ற ஞானச் சித்தனல்லவா அருணகிரியார். ஞானபேறு தானாக அமைவதன்று. அது குரு தொட்டுக் காட்ட அமைவது என்பதை நன்கறிந்துணர்ந்தவரல்லவா? குருவின் முக்கியத்துவத்தை, முருகன் என்பது உருவன்று, உளதன்று, இலதன்று, இருளன்று, ஒளியன்று. இத்தகைய பரம்பொருளைக் குருவாகக் கொண்டு அருள்பெற்றாலன்றி மெய்ப்பொருளை அறிய முடியாது. ஞான வித்தகப் பேற்றினை ஏட்டில் தீட்ட முடியாது. மக்களுக்கு வெளிப்படையாக கூற இயலாது. கல்வி கற்பதால் மட்டும் அதை எட்டிவிட முடியாது. அதை மனத்தாலும் தேட முடியாது. அது தத்துவ விளக்கங்களால் அகப்படாது. ஆயினும் அது குருவின் அருளால் மட்டுமே அறியப் பெறுவது. எனவேதான் குருவான முருகனின் திருத்தாள் பணிந்து,

"புத்தகத்து ஏட்டில் தீட்டி முடியாது
பொற்புற கூட்டிக் காட்டி அருள்ஞான
வித்தகப் பேற்றைத் தேற்றி அருளாயே
மெத்தெனக் கூடிக் காக்க நினைவாயே" (திருப்புகழ்.1101)

என அருணகிரியார் இறைஞ்சுகிறார். இறைஞ்சும் நிலையில் முருகனிடம் அருணகிரியார் பேசுவதை அவரது பாடல்களில் பரவலாகக் காணலாம். இறைவனது அருளைப் பெறுவதற்கு, அவனை எங்கும் தேடி அலைந்திட வேண்டாம். அவரவருக்குரிய காலம் அமையும்போது இறைவனே குருவாக நம்மைத் தேடி வந்து அருள் புரிவான். அதுபோல குருவையும் நாம் தேடி அலைய வேண்டாம். நாம் பக்குவநிலையை அடையும் போது குரு நம்மைத் தேடி

வருவார். அவர் எப்படி வருவார்? எப்படியும் வருவார். நமக்கு அமையவிருக்கும் குரு இப்படித்தான் இருக்க வேண்டும், இந்த உருவில்தான் தோன்ற வேண்டும் என்றெல்லாம் குருவுக்கு இலக்கணம் வகுக்காதே; வரையறை செய்யாதே. உன் பக்குவ நிலைக்கேற்ப குரு தோன்றும். அருணகிரியாரின் இக்கருத்தை,

"உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" (கந்தரநுபூதி.51)

எனும் ஒப்பற்ற பாடலை விட வேறெது விளக்கப்படுத்திவிட முடியும்? அருணகிரியார் மிகச் சிறந்த சிவயோகி. யோக நெறியைக் கைக்கொள்பவர்களை யோகிகள் என்போம். சித்தர்களின் செந்நெறியாகத் திகழ்வதே இவ்யோக நெறிதான். இந்நெறியின் சிறப்பினை அருணகிரியார் அருமைபட தம் பாடல்களில் போற்றியிருக்கின்றார்.

## சிவயோக நெறி

சித்தர்களின் செந்நெறி யோகத்தைத் தழுவியதாகும். எனவே இவர்கள் யோகிகள் என அழைக்கப்படுகின்றனர். இன்று மூச்சுப்பிடிப்பவரெல்லாம் தாம்தான் யோகி எனும் நிலை உருவாகியுள்ளது. இதனால் யோகநெறியைப் பற்றிய பிழையான சிந்தனைகள் மக்களிடையே பரவியுள்ளன. அவ்வாறாயின் யோகம் என்பதற்கான மெய்ப்பொருள்தான் என்ன? யோகம் என்பதற்கு கூடுதல் என்பது பொருள். ஆன்மாவானது இறையுடன் கூடியிருத்தலையே யோகம் என்பர். சிவத்தோடு ஒன்றுபடுதல் சிவயோகம். அருணகிரியாரின் கந்தரநுபூதி சித்தர் பாடல்களைப் போன்றே யோகத்தை மையக் கருத்தாகக் கொண்டு அமைந்துள்ளது. கந்தரநுபூதி எனும் நூலின் பெயரே கந்தரோடு ஒன்று படுதல் என்னும் பொருளைத் தருவதனால் இதை அறியலாம். 'பூதி' என்பதற்கு ஒன்றுபடுதல் என்பது பொருள். 'அநு' என்பது தொடர்வது என்னும் பொருளைத் தரும். ஆக, கந்தரோடு ஒன்று படுவது கந்தரநுபூதி. அருணகிரியார் சிவயோகநெறியில் பெருஞ்சித்தி பெற்றவர். எனவேதான் யோகநெறியில் தான் பெற்ற அனுபவத்தைத் தெளிவுபடப் பாடியிருக்கின்றார். கீழ்க்காணும் பாடல் அதற்குச் சான்றாகிறது:

"உல்லாச நிராகுல யோக விதச்
சல்லாப விநோதனும் நீ அலையோ

எல்லாம் அற என்னை இழந்த நலம்
சொல்லாய் முருகா!சுர பூபதியே” (கந்தரநுபூதி.2)

மேற்கண்ட பாடல் யோகநிலையில் இருக்கும் ஒருவர் அனுபவிக்கும் உயர்தனி நிலையாகிய எல்லாம் அற்ற நிலையைக் குறிப்பிடுகிறது. எல்லாம் அற என்பதற்கு விழி, மெய், வாய், நாசி, செவி, மனம், புத்தி, சித்தம், அகங்காரம் முதலியவையற்று என்பது பொருள். அதாவது கண்ணிருந்தும் காணவில்லை, காதிருந்து கேட்கவில்லை, நாசியிருந்து நுகரவில்லை, நாக்கிருந்து சுவைக்கவில்லை, மனம் சிந்திக்கவில்லை, புத்தி நிச்சயிக்கவில்லை, சித்தம் எதையும் எண்ணவில்லை, அகங்காரம் கொண்டு எழும்பவில்லை. பிறிதோரிடத்தில் யோகம் தந்த பயனை,

“நின்னை உணர்ந்து உணர்ந்து ஒடுங்கிய நிர்க்குணம் பூண்டு
என்னை மறந்திருந்தேன்; இறந்தேவிட்டது இவ்வுடம்பே” (கந்தரலங்காரம்,19)

எனக் குறிக்கின்றார். இப்படியே, அருணகிரியாருடைய பாடல்கள் முழுவதும் அவர்தம் யோகஅனுபவங்கள் வெளிப்பட்டுள்ளன. அவரது யோக அனுபவங்களைக் கோர்த்தெடுத்துப் பார்க்கின்றபோது ஓர் உண்மை புலப்படுகின்றது. அருணகிரியார் முருகனுடைய புகழைப் பக்தி மிக்குறப் பாடியதால் மட்டும் முத்தி பெறவில்லை. மாறாக, குருவாக வந்த முருகப்பெருமானின் திருவருளால் சரியை, கிரியை கடந்து யோகம், ஞானம் ஆகிய சித்தர் செந்நெறியில் நின்றதனால் முக்தி பெற்றார்.

## முடிவுரை

சித்தர்கள், உலகியல் வாழ்வில் படிந்து நிற்கும் ஆசைகளில் விழுந்துழலும் மானிடப்பிறவிகளின் மீது பெருங்கருணை கொண்டவர்கள். ‘யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’ எனும் பெருநோக்குடையவர்கள். உயிர்களின் போக்குநிலை அறிந்து காலங்கள் தோறும் அவற்றைப் பக்குவப்படுத்தி, ஆன்மக்கடைத்தேற்றம் செய்யும் சமூக மருத்துவர்கள். மேன்மை மிக்க சிவயோகச் சித்தராக இருக்கின்ற காரணத்தால்தான் அருணகிரியாரின் பாடல்களில் சித்தர் இலக்கியத்தின் பெருஞானப்பிழிவுப் போக்கைப் பரவலாகக் காண முடிகிறது.

மேலும் அருணகிரியாரும் சித்தர்களைப் போன்றே உயிர்களின் மீது பேரிரக்கம் கொண்டவராகின்றார். மானிடனாக வாழ்ந்தபோது தானுற்றது போன்ற உலகமாயை ஆகிய துன்பங்களில் இருந்து மக்கள் விடுதலை பெற்று, வீடுபேறு பெறும் வழி காண விழைகிறார். அவ்விழைவின் விளைவாக எழுந்தவையே, அருணகிரியாரின் இறவாப் பேறு தரும் பாடல்கள் என்னும் கருத்து இக்கட்டுரையின் வாயிலாகத் தெளிவாகிறது.

## REFERENCES


Arun:akirinha:tha Cuva:Mikal:. (1937). *Kanhtharanhupu:thi*. Chennai, Pūmakaḷ vilāca accukkūṭam

Arun:akirinha:tha Cuva:Mikal:. (1993). *Thirumutaith thirat:t:u.* Chennai, Kanchipuram Nha:kalingka Munivar,

Aruṇakirinātar. (1949). *Tiruppukal̲: viruttiyurai aṭaṅkiyatu*. Amarampēṭu. Irājāttin̲a Mutaliyār.

Caravaṇamuttup Piḷḷai, Vā. (1927) *Patin̲en̲ cittarkaḷ aruḷiya periya ñān̲akkōvai*. Chennai, Ratna Nayakar & Sons.

Civattiyān̲ān̲anta maharṣi. (1932). *Kantaranupūti*. Chennai, Murukavēl puttakacālai.

Clothey, F. W. (1983). SOME ASPECTS OF ARUNAGIRI'S. *Śrīnidhiḥ: Perspectives in Indian Archaeology, Art, and Culture: Shri KR Srinivasan Festschrift*, 261.

Govindhan, S. (2006). Barriers to spiritual fulfillment found in Siddhartha songs and ways to dispose of them. *Journal of Indian Studies 9*, 40-49.

Janakiraman, I. (2021). The Concept of God in Siddha Literature. *International Research Journal of Tamil*, *3*(S-2), 201-206.

Kamalakkan:n:an, Pa:. (1954). *Tiruppukal̲ kāṭṭum mutti nel̲i*, Chennai,Va:nathi Pathippakam

Karthikeyan, N. V., & Binder, A. (2008). *Kandar Anubhuti: Gotteserfahrung des heiligen Arunagirinathar*. Yoga-Vidya-Verlag.

Kirupān̲antavāri. (1954). *Kantaranupūti: uraiyuṭan̲*. Chennai, Thiruppugazhlamiradham

Kōvēntan̲, Ta. (2000). *Tiruppukal̲ meypporuḷ teḷivurai: mutal pākam,* Chennai, Mullai Nilaiyam.

Kuppucāmi Nāyuṭu, Ta. (1905) K*ākapucuṇṭar ñān̲am [80]: Vāci Mun̲ivarukku upatēcañceytatu*. Chennai, Śrīpatmanāpavilāca Accukkūṭam.

Man:iyan, Pa. Cu. (1999). Ciththar nhetikal:um ciththi mutaikal:um. Coimbotore, Vijaya Publication.

Māṇikkavācakam, Irā. (1982). Nam nāṭṭuc cittarkaḷ. Chennai, An̲n̲ai Apirāmi Aruḷ.

Nellaiyappa piḷḷai. (1944). *Kantaranupūti.* Kangeya Nallur: Tirupugalamirtham Press
Parimēlaḻakar. *(2010). Thirukkural: parime:lal-akar urai*. 3rd ed, Madras , Thirumakal: Nhilaiyam

Rajantheran, M., Gill, S. S., Muniapan, B., Silllalee, K., & Manimaran, S. (2014). A critical analysis of siddha tradition in the context of Malaysian Hindu culture. *Life Sci J*, *11*(7).

Roopa, M. (2021). The Theological Priciples of Siddhar and Vallalar Songs. *International Research Journal of Tamil*, *3*(S-2), 107-111.

Sivapalan, G. (2013). Siddha Medicine as Descripted in Siddhar Literature. *Journal of Indian Studies*, *10*(Special), 38-42.

Sivapalan, G., & Manimaran, S. (2021). Harmony beyond Religion in Siddhar and Sufi Literatures. *Journal of Tamil Peraivu*, *10*(1), 23-29.

Sri, P. (1999). *Aruṇakirinātariṉ vāḻkkai varalāṟu.* Chennai, Alliance Company.

Thangavelu, M. K. (1981). The philosophy and teachings of saint arunagirinathar with special reference to kandar anubhuti. http://hdl.handle.net/10603/139988

Vayittiyaliṅkapiḷḷai, Ca. & Piracāntaṉ, Śrī. (2018). *Aruṇakirinātar aruḷicceyta: Kantaralaṅkāram*, Colombu, Intu Camaya Kalācāra Aluvalkaḷ Tiṇaikkaḷam.

Vēlaṉ, tā.Ti. (1990). *Tiruvaḷḷuvar oru cittar.* Chennai, Suriyaan Publishing House.
Vijayakumar, B. (2021). Theological principle and doctrine emphasized by Thiruvarutha. *International Research Journal of Tamil*, *3*(S-2), 222-227.